2016 ஜனவரி 21] [பேரவைத் தலைவர்]

"ஜம்மு–காஷ்மீர் மாநில முதலமைச்சரும், அம்மாநிலத்தில் அமைதி தவழ தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவரும், மத்திய, மாநில அரசுகளில் நீண்ட காலம் பணியாற்றி அனுபவம் பெற்ற மூத்த தலைவருமான திரு. முப்தி முகமது சயீத் அவர்கள், 7–1–2016 அன்று தனது 79–வது வயதில் உடல்நலக் குறைவு காரணமாக புது தில்லியில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. முப்தி முகமது சயீத் அவர்கள் 1986 ஆம் ஆண்டு மத்திய சுற்றுலா அமைச்சராகவும், 1989 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை மத்திய உள் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை மற்றும் மார்ச் 2015 முதல் ஜம்மு–காஷ்மீர் மாநில முதலமைச்சராக திறம்பட பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், ஜம்மு–காஷ்மீர் மாநில மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(இ) திருமதி மனோரமா, பழம்பெரும் நடிகை மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழம்பெரும் நடிகை திருமதி மனோரமா அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

முற்பகல் 10–10

"பழம்பெரும் திரைப்பட நடிகையும், தமிழ் திரையுலகினராலும், திரைப்பட ரசிகர்களாலும் 'ஆச்சி' என்று அன்போடு அழைக்கப்படும் திருமதி மனோரமா அவர்கள், உடல் நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 10–10–2015 அன்று காலமானார் என்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திருமதி மனோரமா அவர்கள், மேடை நடிகையாக தன்னுடைய கலையுலக வாழ்க்கையைத் தொடங்கி, சினிமாவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் என்று அன்றைய தலைமுறை கதாநாயகர்கள் மற்றும் இன்றைய தலைமுறை கதாநாயகர்களுடன் 1,300 திரைப்படங்களுக்கு மேல் நடித்து,

சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரைப்பட வரலாற்றில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து திரைப்பட உலகில் மாபெரும் சாதனை படைத்தவர்.

அவர் திரைப்படத் துறையில் 1,000 படங்களுக்கு மேல் நடித்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். கலைத் துறையில் அவர் ஆற்றிய ஈடுஇணையற்ற பங்களிப்பிற்காக மத்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது, தேசிய விருது மற்றும் தமிழக அரசின் சார்பில் கலைமாமணி விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர்.

அவரது மறைவு தமிழ் திரைப்படத் துறையினருக்கு மிகப் பெரிய இழப்பாகும். அவருடைய இடத்தை யாரும் ஈடு செய்ய முடியாது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஈ) திரு. ஏ.பி. பரதன், இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் திரு. ஏ.பி. பரதன் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

"இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதுபெரும் தலைவரும், மூத்த அரசியல்வாதியும், ஏழையெளிய, உழைக்கும் மக்களுக்கு தன்னலமற்ற சேவை புரிந்தவரும், அடித்தட்டு மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவருமான திரு. ஏ.பி. பரதன் அவர்கள் தனது 92–வது அகவையில் 2–1–2016 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த மாமனிதர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும்